www.kalvikural.com

**ST.PAUL'S MATRICULATION HIGHER SECONDARY SCHOOL, BLOCK – 4, NEYVELI.**

**பத்தாம் வகுப்பு மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2020 நேரம் : 3.00 மணி**

**28.02.2020 மொழிப்பாடம் : தமிழ் மதிப்பெண்கள் : 100**

**பகுதி - I ( மதிப்பெண்கள் : 15 )**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக்குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். ( 15 x 1 = 15 )**

1. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்

அ. குறுந்தொகை ஆ. கொன்றைவேந்தன் இ. திருக்குறள் ஈ. நற்றினை

2. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ. உழவு, மண், ஏர், மாடு ஆ. மண், மாடு, ஏர், உழவு

இ. ஏர், உழவு, மாடு, மண் ஈ. உழவு, ஏர், மண், மாடு

3. ' சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' - பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து -

அ. பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.

ஆ. பலகலைகள் தமிழில் புதிதாக தோன்ற வேண்டும்

இ. உலகெங்கும் கானப்படும் செல்வங்கல் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்

ஈ. கலைச்செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

4. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்

அ. எள்கசடு ஆ.பிண்ணாக்கு இ. ஆமணக்கு ஈ. எள்கட்டி

5. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக்கொண்டவர்

அ. தமிழழகனார் ஆ.அப்பத்துரையார் இ. தேவநேயப் பாவணர் ஈ.இரா. இளங்குமரனார்

6. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ. அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ. வெளிநாட்டு முதலீடுகள்

இ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல் ஈ. அறிவியல் முன்னேற்றம்

7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .........

அ. இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ. என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது இ. இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ. என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

8.கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக.

அ. குறிஞ்சி - 1.உப்பு விளைவித்தல்

ஆ. முல்லை - 2. நெல்லரிதல்

இ. மருதம் - 3. நிரைமேய்தல்

ஈ. நெய்தல் - 4. தேனெடுத்தல்

அ) அ-1 ஆ-3 இ-2 ஈ-4 ஆ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3 இ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1. ஈ) அ-3 ஆ-2 இ-4 ஈ-1

9. வெ ஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அலபெடைகள்

அ. ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை ஆ. இன்னிசை அளபெடை, ஒற்றளபெடை இ. சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ. ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

10. '<u>சிவப்புச் சட்டை</u>' பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ.பண்புத்தொகை ஆ.உவமைத்தொகை இ.அன்மொழித்தொகை ஈ.உம்மைத்தொகை

11. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" - இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள்.

அ. காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்

ஆ. உரிய கால்த்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.

இ. உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்

ஈ. உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

"அன்று அவண் அசைஇ அல்சேர்த்து அல்கி,
கன்று எரி ஒளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நாலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோந்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,"

12. 'அசைஇ ' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ.வினைத்தொகை ஆ.பண்புத்தொகை

இ.சொல்லிசை அளபெடை ஈ.செய்யுளின் அளபெடை

13. ' சிலம்பு அடைந்திருந்த பாகம் எய்தி' - இவ்வடியில் ' பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்

அ. சிற்றூர் ஆ. பேரூர் இ. கடற்கரை ஈ. மூதூர்

14. பாடல் இடம்பெற்ற நூல்-

அ. சிலப்பதிகாரம் ஆ. மலைபடுகடாம் இ.முல்லைப்பாட்டு ஈ. காசிக்கண்டம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்

அ. அன்று, கன்று, அல்ங்கு, சிலம்பு ஆ. அன்று, அவண், அசைஇ, அல்கி

இ. சேந்த, செயலை, செப்பம், சிலம்பு ஈ. அல்கி, எய்தி, போகி, எனினே

**பகுதி - II ( மதிப்பெண்கள் : 18 )**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **( 4 x 2 = 8 )**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக் கூறுகளைக் கொண்டுள்ளது.

ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

17. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்கலில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?

18. மெய்ய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் என்ன?

19. ' கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின் பொருளை வள்ளுவர் வழி நின்று கூறுக.

20. குற்ப்பு வரைக - " **அவையம்** "

21. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகப் போற்றுவர் என்னும் பொருளைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **( 5 x 2 = 10 )**

22. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

23. கலைச்சொல் தருக.

அ) **Ultaviolet Rays** ஆ) **Space Technology**

எதிர்மறையான சொற்களை எழுதுக

அ) மீளாத் துயர் ஆ) புயலுக்கு பின்

24. உணவு, விருந்து சார்ந்த பழமோழி ஒன்றினையும், விழிப்புணர்வுத் தொடர் ஒன்றினையும் எழுதுக.

M.G.RAYMOND, M.Sc., B.Ed, 9629705161 / 9442980841

25. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

26. **' உரைத்த '** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்" - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

28. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்கு செல்கிறேன். - இத்தொடர், கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**பகுதி - III ( மதிப்பெண்கள் : 18 )**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **(2x3=6)**

29. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிரிக்காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஒரு சிறு உரையாடலை அமைக்க.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

31.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்து போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாள்ர், புதல்வரை பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ. போர் அறம் என்பது எவற்றை குறிக்கிறது?

ஆ. ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்து குறிப்பிடுவது யாது?

இ. போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்** ( 2 x 3 = 6 )

32. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

33. தீவக அணியை விளக்கி, அதன் வகைகலை எழுதுக.

34. **அடிபிறழாமல் எழுதுக** -

அ) " இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபாடும் பண்பே" - என முடியும் காசிக்காண்டப் பாட்ல்.

**(அல்லது)**

ஆ) " புண்ணியப் புலவீர் யான்......" எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** (2x3=6)

35. " ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

36. தன்மையணி என்பதனை விளக்கி, அதன் வகைகளைக் குறிப்பிடுக.

37. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு. விரித்து எழுதுக.

M.G.RAYMOND, M.Sc., B.Ed, 9629705161 / 9442980841

**பகுதி - IV ( மதிப்பெண்கள் : 25 )**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** ( 5 x 5 = 25 )

38. அ) இறைவன், புலவர் இடைகாடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) புதிதாகத் திறன் பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு எட்டு வரிகளில் கவினுற கவிதை ஒன்று எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினை பூர்த்தி செய்க.

42. அ) நம் பழம்பெருமையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள் கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும்., அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature , the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight. Seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamil.

**பகுதி - V ( மதிப்பெண்கள் : 24 )**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.** ( 3 x 8 = 24 )

43. அ) மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துக்களையும் அவர்களது மறுவாழ்விற்க்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) எழுத்தாளர் ஜெயகாந்தனின் ' இன்னொரு முகம் ' குறித்தும் அவரிடம், 'தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக.

44. அ) "புயலிலே ஒரு தோணி" கதியில் இடம் பெற்றுள்ள வருணணைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி சுவைபட விவரிக்க.

**(அல்லது)**

ஆ) உங்களைக் கவர்ந்த அறிவியல் அறிஞர்களின் கூற்றுகளை ஒப்பிட்டு, அவை ஸ்டீபன் ஹாக்கின் கருத்துக்களோடு ஒத்திருப்பதை சுவைபட விளக்குக.

45. அ) முன்னுரை - விசும்பின் துளியும் பசும்புல் தலையும் - காற்று மாசு - பசுமையைக் காப்போம் - மரம் நமக்கு வரம் - மழைநீர் உயிர் நீர் - முடிவுரை. - இக் குறிப்புகளைப் பயன்படுத்தி " இயற்கையைக் காப்போம் " என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) முன்னுரை - உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் - சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - முடிவுரை.

- இக் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதி , பொருத்தமான தலைப்பிடுக.

---

**நூலக உறுப்பினர் படிவம்**

**---------------------------------- மாவட்ட நூலக ஆணைக்குழு**

**மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..............................................................**

**<u>உறுப்பினர் சேர்க்கை அட்டை</u>**

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த நாள் :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி / அலைபேசி :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ____________________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ________ சந்தா தொகை ரூ. __________ ஆக மொத்தம் ரூ. ________ செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள ,

திரு / திருமதி / செல்வி / செல்வன் ______________________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

M.G.RAYMOND, M.Sc., B.Ed, 9629705161 / 9442980841